மக்களுக்காக: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்! 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 29 சனிக்கிழமை (14 11 1992) UTHAYAN – A Lively National Tamil Daily இதழ் 352

பிரபாகரன் பங்குபற்றாத எந்தத் தீர்வும் பயனற்றது!

சிறிமாவோ அறிவிப்பு

கொலோன், நவம்பர் 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் ஒரு கட்சியாகப் பங்குபற்றாத நிலையில் காணப்படும் எந்தத் தீர்வினாலும் பயன் கிடைக்காது. — இவ்வாறு கூறினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், எதிர்க் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

ஜேர்மன் வானொலியின் செய்தியாளர் டாக்டர் ஹான்ஸ் போர்ஜ் கூக்குமிர்க்கு இன்னொரு முறை தொலைபேசி மூலம் அழைப்பு ஏற்படுத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையைப் பொறுத்த வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண — புயங்கரவாதத்தை ஒழிக்க — நீங்கள் கூறும் வழி என்ன?" — என்று செய்தியாளர் எழுப்பிய வினாவுக்கு திருமதி பண்டாரநாயக்கா பதிலளித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், நவ. 14

காரைநகர் வல்லதலை இராணுவ முகாமில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் சாரதோரப் பகுதியை நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து—

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர் எழுச்சி வாரம் நாளை பொதுப் பணியுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 14

நாளை முதல் மாவீரர் எழுச்சி வாரம் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை ஆரம்பிக்கும் எழுச்சி வார நிகழ்வுகள் 20 ஆம் திகதி வரை இடம்பெறும்.

இந்த வாரத்தில் வட்டமலை ரீதியாக சிரமதானம் மேற்கொள்ளப்படும். பொது அமைப்புக்கள், சமூக நிலையங்கள் ஆகியவை மக்களுடன் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபடும்.

வீதிகள், பொது இடங்கள், வீடுகள் ஆகியவற்றை துப்புரவாக்கும் பணிகளும் —

மாவீரர் வரலாற்றுக்கான கண்காட்சிகள், பாடல்கள், அமைக்கும் பணிகளும் இந்த வாரத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் பல்வேறு பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

15 ஆம் திகதி தென்மராட்சியிலும், 16 ஆம் திகதி வடமராட்சியிலும், 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 18 ஆம் திகதி பண்டத்தரிப்பிலும், 19 ஆம் திகதி யாழ். இடையிலும் அழைத்திலும், 20 ஆம் திகதி மருதனார்மடத்திலும், 21 ஆம் திகதி கொக்குவிலிலும் சிரமதானப் பணிகளை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

(உ-3)

கிழக்கில் பிரவேசித்த சூறாவளி நீர்கொழும்பு வழியே அகன்றது

4 பேர் பலி; 50 பேர் காயம்; 15,000 பேர் வீடிழப்பு

கொழும்பு, நவ. 14

கடந்த வியாழன் நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையில் இலங்கைக்குள் கிழக்குக் கரையில் ஊடறுத்துப் பிரவேசித்த சூறாவளி, நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நீர்கொழும்பு கடற்கரை வழியாக இலங்கையை விட்டு வெளியேறிச் சென்றது.

படிப்படியாக வலுவிழந்த நிலையில் இச் சூறாவளி வட மேற்குத் திசையாகவும் மேலாக திரண்டு அரபுக் கடலை நோக்கிச் சென்கின்றது என்று வளிமண்டல திணைக்களம் அறிவித்தது.

இதற்கிடையில் —

பிரதிக் கொடுத்த செய்திகளின்படி, இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி தாக்கத்தினால் நாடெங்கிலும் அதிகமாக 15 ஆம் திகதி தென்மராட்சியிலும், 16 ஆம் திகதி வடமராட்சியிலும், 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 18 ஆம் திகதி பண்டத்தரிப்பிலும், 19 ஆம் திகதி யாழ். இடையிலும், 20 ஆம் திகதி மருதனார்மடத்திலும், 21 ஆம் திகதி கொக்குவிலிலும் சிரமதானப் பணிகளை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

(உ-3)

கிழக்கில் பிரவேசித்த சூறாவளி நீர்கொழும்பு வழியே அகன்றது

4 பேர் பலி; 50 பேர் காயம்; 15,000 பேர் வீடிழப்பு

கொழும்பு, நவ. 14

கடந்த வியாழன் நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையில் இலங்கைக்குள் கிழக்குக் கரையில் ஊடறுத்துப் பிரவேசித்த சூறாவளி, நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நீர்கொழும்பு கடற்கரை வழியாக இலங்கையை விட்டு வெளியேறிச் சென்றது.

படிப்படியாக வலுவிழந்த நிலையில் இச் சூறாவளி வட மேற்குத் திசையாகவும் மேலாக திரண்டு அரபுக் கடலை நோக்கிச் சென்கின்றது என்று வளிமண்டல திணைக்களம் அறிவித்தது.

இதற்கிடையில் —

பிரதிக் கொடுத்த செய்திகளின்படி, இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி தாக்கத்தினால் நாடெங்கிலும் அதிகமாக மொத்தம் 15 ஆயிரம் பேர் வரை வீடுகளை இழந்தனர். உயிரிழந்தோரின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கிழக்கில்

கிழக்கு மாகாணத்தில் மட்டும் சூறாவளியால் 4 பேர் வரை உயிரிழந்தனர். மூப்பது பேர் வரை காயமடைந்தனர். மொத்தமாக, அக்கரைப்

6 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாடு எங்கணும் பெருமழை, கடும்காற்று

யாழ்ப்பாணம், நவ. 14

நேற்று முற்றிலும் — வியாழக்கிழமை — இரவு குடாநாட்டெங்கும் பெருமழை பெய்தது. மழை பெய்த வேளை கடுங்காற்றும் வீசியதால் பல மரங்கள் பிடுங்கி வீழ்ந்தன. பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது.

இதனால் குடாநாட்டின் பல பகுதிகளிலும் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் நிரம்பியதால் அப்பகுதிகளில் இருந்த பொது மக்கள் வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

வியாழன் இரவு, நேற்றுக் காலை, நேற்று இரவு பெய்த மழையினால் குளங்கள், கேணிகள் என்பனவும் நிறைந்து வழிந்தோடின. வயல்களிலும் நீர் நிறைந்து காணப்பட்டது.

வியாழன் இரவு வீசிய கடுங் காற்றினால் தென்மராட்சியில் தென்னை மரங்கள் பெரும் எண்ணிக்கையில் முறிந்து விழுந்தன. வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் — சோப்பாய், நீர்வேலி, கிறுப்பிட்டி, நவாலிப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான வாழைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இன்றும் மழை பெய்யும் இலங்கை வானொலி தகவல்

கொழும்பு, நவ. 14

இலங்கையைத் தாக்கி கடந்து சென்ற சூறாவளி நேற்று புத்தளத்துக்கு மேற்கே இருநூறு கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்ததாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

தற்போது சூறாவளி இலங்கையிலிருந்து முழுவதாக நகரத் தொடங்கியிருக்கிறது. ஆனாலும் வடக்கு, வடமேற்கு, சப்பிரகமுவ மாகாணங்களிலும், கால மாவட்டத்திலும் தொடர்ந்து இன்றும் மழை பெய்யும்.

மன்னாரட்டின் மேற்குப் பிரதேசத்திலும், மேற்குக் கரையோரத்திலும் சில இடங்களில் கடும் மழை பெய்யக் கூடும்.

வடமாகாணம் மற்றும் வட மேற்கு மாகாணங்களில் பலத்த காற்று வீசும்.

காங்கேசன்துறையிலிருந்து காலி வரையான மேற்குக் கரையோரத்தில் — ஆழ்கடல் பகுதிகள் — கொந்தளிப்பாக இருப்பதோடு கடும் காற்று வீசும். இடையிடையே

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைஞர் சேவை

யாழ்ப்பாணம், நவ. 14

நேற்றிரவு மழைக்கு மத்தியிலும் சில படகுகளை இளைஞர் கடலில் சேவையில் ஈடுபட்டன.

ஆங்காங்கு செல்லத்தக்க வகையில் கரையில் தரித்திருந்த பயணிகளை ஒரு தொகுதியினர் நேற்றிரவு இப்படகுகளில் புறப்பட்டுச் சென்றனர்.

(உ-15)

யாழ். நகரில் 150.1 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ் நகரப் பகுதியில் நேற்று முற்றினம் காலை 8-30 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8-30 மணி வரையான — 24 மணித்தியாலத்தில் — 150.1 மில்லி மீற்றர் மழை பெய்ததாக யாழ் வளி மண்டலவியல் நிலைய பொறுப்பாளர் திரு எஸ். கே. லோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் ஆக கூடிய மழை இது என்றும் அவர் கூறினார்.

யாழ். நகரப் பகுதியில் நேற்று முன்தினம் 25 மில்லி மீற்றர் வரையிலான மழை பெய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ஒ)

கொழும்பில் மழையின் மத்தியிலும் மனித சங்கிலிப் போராட்டம்; எதிரணி நேற்று ஆரம்பித்தது

சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்துள்ள மூன்று நாள் மனித சங்கிலிப் போராட்டம் நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு மஹிந்த ராஜபக்ஷ நாயக்க இதனை ஆரம்பித்து வைத்தார்.

வருண மழையையும் பொருட்படுத்தாது ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடி இம் மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

35 மைல் தூரத்திற்கு மனித சங்கிலித் தொடர் இருக்கும் என்றும்—

இரத்தினபுரி வரை இப் போராட்டம் நடத்தப்படும் என்றும் எதிர்க்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். கூடவர் இரண்டு லட்சம் பேர் 101 கிலோமீற்றர் தூரத்திற்கு இருந்து கை இப் போராட்டத்தில் கலந்து கொள்வர் என்றும் அவர் கூறினார்.

மேலதிகமாக உயர்வு, சிரசு நிறுவனங்களை தனியாருக்கு கையளித்தல், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முடிவுக்கு வராத யுத்தம் ஒன்றை நடத்துவது போன்றவற்றை கண்டித்தே இப் போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-எ)

"ஜிகாத்"தை தொடங்க முஸ்லிம்கள் ஆதரவாம்

மாத இதழ் கருத்துக் கணிப்பு

கொழும்பு, நவ. 14

"ஜிகாத்" எனப்படும் புனிதப் போரைத் தொடங்க வேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மீது தேசிய முஸ்லிம்களில் பெரும்பாலானோர் ஆதரவு தரத் "தினகரன்" என்ற பத்திரிகை தான் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக "ஜிகாத்" நடத்த வேண்டும் எனத்தனை பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் ஆதரித்திருப்பதாக கருத்துப் பத்திரிகை அறிவித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் தனியான முஸ்லிம் பிரிவு ஆரம்பிக்கப்படுவதையும் கணிசமான முஸ்லிம் மக்கள் ஆதரிக்கின்றனர் எனவும் "தினகரன்" மாத இதழ் தெரிவித்துள்ளது.

இந்த மாத இதழ் முஸ்லிம் காங்கிரஸையும் அதன் தலைவர் அஷ்ரப்பையும் எதிரொலிப்பதாக விமர்சித்து வரும் சஞ்சிகை என்பதும் குறிப்பிடத்தக்கது.

"ஜிகாத்" யோசனையை அதன் ஆசிரியர் தலையங்கமாகவும் அவதானிக்கத் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏனைய கொழும்புத் தமிழ்க் குழுக்களை இராணுவத்துடன் சேர்த்துப் போராடும் அரசின் நடவடிக்கையையும் இந்த மாத இதழ் கண்டித்திருக்கிறது.

(உ-6)

குளம் பல வெட்டி வளம் பெறவே
நிலம் தனில் மழைநீர் தேக்கிடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பாடசாலைகளுக்குரிய

தளபாடங்களில் ஒரு தொகுதி மாத இறுதியில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட மாடசாலை மாணவர்களுக்கான தளபாடங்களின் ஒரு தொகுதி இம்மாத இறுதியில் 'ஓமன்' கப்பல் மூலம் எடுத்துவரப்பட இருப்பதாக கொழும்பிற் இருந்த பிரதமநிதிய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு நேற்று தகவல் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு இவ் வாண்டு ஒதுக்கப்பட்ட 35 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களில் 50 வீதமான வற்றை இராணுவக் கட்டுப்பாட்டுக் உள்ள பகுதிக்கு வழங்கினால் மிகுதியை, மீதியானதிறை யாழ்ப்பாணம் எடுத்துச்செல்ல அனுமதி வழங்க முடியும் என்று கூட்டுப் படைத் தலைமையகம் நிபந்தனை விதித்திருந்தது தெரிந்ததே.

தளபாடங்களின் தேவை குறித்து பிரதேசிய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மத்திய கல்வி அமைச்சு செயலாளர், மாகாண கல்வி அமைச்சு செயலாளர் ஆகியோருக்கு வாய்மொழி மூலம் அறிவித்தபடுத்தி. 10 வீதமான தளபாடங்களை திவுப்படுத்திலும், எஞ்சிய வற்றை யாழ் மாவட்டத்துக்கும் எடுத்துச் செல்ல கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

அதைபடுத்து ஆயிரம் எதிர்ப மேசைகளும், சங்கீத வாத்திய கருவிகளும், கீழ் ஞான ஆய்வு கூட உபகரணங்களும், 'ஓமன்' கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நேற்று கொழும்பிலிருந்து தகவல் கிடைத்தது. (உ-3)

ஹொரஹொல்ல வளவில்

சந்திரிகாவின் கோஷ்டியை அனுரா கோஷ்டி விரட்டியது!

கொழும்பு, நவ. 14

கடந்த 9 ஆம் திகதி — போயா தினத்தன்று — திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்குச் சொந்தமான வத்தளையில், ஹொரஹொல்ல வளவில் அனுரா கோஷ்டியும் சந்திரிகா கோஷ்டியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன என அறியப்படுகிறது.

அப்போது அனுராவின் கோஷ்டியினர் சந்திரிகாவின் ஆதரவாளர்களை விரட்டியடித்தனர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

கண்ணீர் அஞ்சலி

இளையதம்பி கார்த்திகேசு

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி ஆசிரியை திருமதி கனகேஸ்வரி இளையான் அவர்களின் தந்தையார் திரு. இளையதம்பி கார்த்திகேசு 13-11-91 இல் காலமாகி விட்டார். இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது ஆத்மசாந்திக்கு எமது பிரார்த்தனைகள்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (23266)

ஓராண்டு நினைவு நாள்

மலர்வு: 21 — 09 — 1990

உதிர்வு: 14 — 11 — 1991

கலாதரன் நிரோஷன்
(டுபாய் மாஸ்டர்)

புனிதமான ஒரு மலைப்பு - பூ
பூப்போலப் பூமியிலே மலர்ந்தாய்
பூப்போல எமை எல்லாம் கவர்ந்தாய்
பூப்போல உடனே உதிர்ந்தாய்
பூ போல உன் நினைவும் புனிதமானதே.

பூவே கருகிவிட்ட உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் பாசமுள்ள மலடாவிலிருந்தும்;

அப்பா, அம்மா மற்றும் குடும்பத்தினர்.

247, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [5570]

இன்று

தென்மராட்சி, நவ. 14

மூகமாலை நோமன் கத் தோலிக்க பாடசாலையின் அரங்கக் கல்விப் பொதுப் காட்சியும் கலை விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண் டபத்தில் ஆரம்பமாகும்.

கிளிநொச்சி மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் பொருட் காட்சியை ஆரம்பித்து வைப் பார். (ஒ-117)

மகாஜனா மாணவருக்கு

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்குரிய பொருள்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் இணுவில் மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப் படும்.

இன்று பகல் 2 மணி முதல் 5 மணி வரையும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையும் பொருள்கள் வழங்கப்படும் என மகாஜனாக் கல்லூரி அதிபர் திரு. க. நகராசா அறிவித்துள்ளார். (ஒ-152)

இடமாற்றத்தை ரத்துச்செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 14

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுச் செயலாளர் ஜனாப் எம். ஏ. கி. முகைதீன், யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

திரு. மகாசிவம் வலிகாமம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து நல்லூர் சம்மார்க்க மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அதனை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்து வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு மேன் முறையீடு செய்தார்.

அதனைத் தொடர்ந்தே அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கல்வி அமைச்சுச் செயலாளர் பணிப் புரை விடுத்துள்ளார். தமது முன் அனுமதி பெறாமல் இவ்விடமாற்றத்தைச் செய்ததற்கான விளக்க அறிக்கை அனுப்புமாறும் யாழ். கல்விப் பணிப்பாளரை ஜனாப் முகைதீன் கேட்டுள்ளார். (உ)

இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். கல்வித் திணைக்களம் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் — 19வயதுப் பிரிவில் — அரையிறுதிப்போட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மருத்துவபீட மைதானத்தில் நடை பெறும்.

இந்த ஆட்டத்தில் இளவாலை செஞ் ஹென்றீஸ் அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்ரான்லிரோ தயா அணி மோதும்.

இந்த ஆட்டம் கடந்த வியாழக்கிழமை மாலை ஆரம்பமாகிப் பின்னர், மழை காரணமாக இடைநடுவில் கைவிடப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது (உ)

ஆசிரிய நியமனங்கள்

மாவட்ட பணிமனையிலேயே இனி நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ. 14

ஆசிரிய நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை மாவட்டக் கல்வி அலுவலகங் களிலேயே நடத்த வடக்கு - கிழக்கு மாகாணசபையின் ஆளுநர், கல்வி கலாசார விவகாரப் பிரிவுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். ஏ. காதர் முகைதீனைப் பணித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளின் தூதுக் குழு ஒன்று அண்மையில் ஆளுநரை சந்தித்துப் பேசிய நடந்தது. அந்தச் சந்திப்பின் போது விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றே இத்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த 5 ஆம் திகதி இடம் பெற்ற இச்சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், துணைத்தலைவர் திரு. எஸ். தேவதாசன், திருமலை மாவட்ட செயலாளர் திரு. எஸ். தண்டாயுதபாணி, திருமலை மாவட்டப் பொருளாளர் திரு. ந. இராஜநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாகாண அமைச்சின் செயலாளர் காதர் முகைதினும் அங்கு சமுகமளித்திருந்தார்.

மாவட்ட, கோட்ட, மட்டங்களில், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட இடமாற்ற சபை மூலமே அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் அந்தக் கலந்துரையாடலில் வைத்துப் பணிப்புரை விடுத்ததாக தமிழர் ஆசிரிய சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

மின் உபகரண கடத்தல்; ரூ. 120 லட்சம் அபராதம்!

கொழும்பு, நவ. 14

ஹொங்கொங்கில் இருந்து மின் உபகரணங்களைக் கடத்தி வந்த சம்பவம் தொடர்பாக கம்பெனி இயக்குநர் ஒருவருக்கும் மற்றும் ஒருவருக்கும் சுங்கத் திணைக்களம் ஒரு கோடி 20 லட்சம் (120 லட்சம்) ரூபா அபராதம் விதித்தது.

இதேவேளை —

85 லட்சம் ரூபா பெறுமதியான 49 தங்கப் பாளங்களை நாட்டுக்குக் கடத்திவர முயற்சித்த வர்த்தகர் ஒருவருக்கு 90 லட்சம் ரூபா அபராதத்தை சுங்கத் திணைக்களம் விதித்தது.

டெலிவிஷன் பெட்டிகளுக்குள் தங்கப் பாளங்களைக் கடத்திவர எடுக்கப்பட்ட இந்த முயற்சியை சுங்கத் திணைக்களம் கடந்த மாதம் முறியடித்தது.

கொழும்புத் துறைமுகத்தில் உள்ளவர்களுடந்தான் வைத்து இத் தங்கப்பாளங்கள் கைப் பற்றப்பட்டன. (ஒ-எ)

12 பொது மலசலகூடங்கள்; மாநகரசபை புனரமைக்கும்

வண்ணார்பண்ணை, நவ 14

யாழ். நகரின் மத்தியில் மிகவும் நிலைய விதியில் அமைந்துள்ள 12 பொது மலசல கூடங்களை யாழ். மாநகர சபையால் புனரமைக்கப்பட உள்ளன.

இதற்கு முன்னோடியாக இம் மலசலகூடங்களை அமைந்திருக்கும் பகுதிக்கு முன்பாக உள்ள 7 கடைகள்வரை அங்கு இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. அகற்றிய கேபிடத்தில் அமைக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம் மலசல கூடங்களை பாவனைக்கு வந்ததும் ஆக்கிரமிப்பாளர்களால் நிர்வாகரீதியாக நிர்வகிக்கப்படுவதுடன் —

மலசல கூடங்களைப் பயன்படுத்துவோரிடமிருந்து பராமரிப்பு செலவாக ஒரு தொகை கட்டணமும் அறவிடப்படும்.

மக்களை ஆயுதம் ஏந்த கோரும் துண்டுப் பிரசுரம்

தெற்கில் அச்சகம் முற்றுகை

மக்களை ஆயுதம் ஏந்தும் படி கோரும் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டதாகக் கருதப்படும் அச்சகம் ஒன்றை தென் பகுதியில் பொலீஸார் முற்றுகையிட்டனர்.

ஒரு தீவிரவாத சந்தேக நபரையும் பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

யாழ். மாவட்ட

ஒய்வூதிய கொடுப்பனவுக்கு மேலும் ரூ. 2 கோடி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ 14

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளுக்கென மேலும் இரண்டு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய திறைசேரி இணக்கம் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக யாழ். மாவட்டத்துக்கு இதுவரை காலமும் மாதாந்தம் 2 கோடி ரூபாவையே திறைசேரி ஒதுக்கீடு செய்து வந்தது.

ஆனால் யாழ். மாவட்டத்தில் மொத்த ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் சுமார் 5 கோடி ரூபா தேவை என்பது குறிப்பிடத் தக்கது.

இதுவரை காலமும் ஒய்வூதியக் கொடுப்பனவுக்குத் தேவைப்படும் எஞ்சிய மூன்று கோடி ரூபாவும்—

அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பதன் மூலம் கிடைக்கும் பணத்திலிருந்து பெறப்பட்டு வந்தது. [உ-3-162]

இலவச பாடநூல்கள் டிசம்பரில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை "ஓமன்" கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்தது.

பாடப் புத்தகங்களை பொறுப்பேற்று அவற்றைப் பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்ளவதற்காக யாழ். செயலக அதிகாரி ஒருவர் கொழும்புக்கு இவ்வாரம் செல்லவுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதவிப்பணம் பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

ஆனால் போதிய நிதி ஒதுக்கீடு இல்லை

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ் மாவட்டத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஆனால் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு கடந்த ஒருவருடமாக அதிகரிக்கப்படவில்லை.

யாழ் செயலக சமூக சேவைப்பிரதி அதிபர் இதனைத் தெரிவித்தார்.

பொதுசன மாதாந்த உதவி பெறத் தகுதியுடைய நூற்றுக் கணக்கானவர்கள் ஒவ்வொரு அரச அதிபர் பிரிவிலும் விண்ணப்பித்துள்ளனர் என்றும்—

போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் அனைவருக்கும் உதவி வழங்க முடியாதுள்ளதாகவும்— அந்த அதிகாரி தெரிவித்தார்.

பொதுசன உதவிப்பண மாக வழங்க யாழ். மாவட்டத்துக்கு 1990ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையான 18 லட்சம் ரூபாவை அதிகரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

உதவிப்பணம் பெறுபவர்களில் எவரும் இறந்தால் அவரது பணம் வேறு ஒருவருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுவதாகவும்—

14 உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உதவி வேறு புதிதாக விண்ணப்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

வவுனியா ரயில் கொள்ளை: இரு பெண்கள் கைது

வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் ரயில் பயணிகளிடம் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக இரு பெண்களை மாகோவில் வைத்து பாதுகாப்பு ஊழியர்கள் கைது செய்தனர்.

இரண்டு சந்தேக நபர்களையும் பாதுகாப்பு ஊழியர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மயக்கமடையச் செய்யும் உணவுப் பண்டங்களை உணவுக் கொடுத்து பயணிகளின் உடைமைகளை அபகரிக்கும் சம்பவங்கள், வவுனியா - கொழும்பு ரயில்களில் அடிக்கடி சம்பவம் அதிகரித்து வந்தன என்பது தெரிந்ததே. [இ-எ]

மட்டக்களப்பு மக்கள் வங்கியில் ரூ. 3 கோடி 4 லட்சம் பெறுமதி நகைகள் அடகு

கொழும்பு, நவ. 14

கிழக்கு மாகாணத்தில் நகை அடகு பிடிக்கும் வேலையை மக்கள் வங்கி மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 3 கோடியே 4 லட்சத்து 300 ரூபா பெறுமதியான நகைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் வங்கியினால் அடகு பிடிக்கப்பட்டுள்ளது.

நகை அடகு பிடிக்கும் வேலை கடந்த ஆண்டிலிருந்தும் ஆரம்பிக்கப்பட்டது. வன்செயல் காரணமாக நகை அடகு பிடிப்பதை மக்கள் வங்கி முன்னர் நிறுத்தி வைத்திருந்தது. (இ-எ)

மண்ணெண்ணெய்யை குறைந்த விலையில் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 14

இராணுவ நடவடிக்கைகள் நிர்வகிப்பதற்கு உள்ளாகிய மக்களுக்கு குறைந்த விலையில் மீண்டும் மண்ணெண்ணெய் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வலி மாவடமிறி வாழும் மக்கள், விவசாயிகள், மாணவர்கள், தொழில் இழந்தவர்கள் போன்றோர் அத்தியாவசிய பொருள்களில் ஒன்றான மண்ணெண்ணெய் இன்றி கஷ்டப்படுகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [இ-17]

வயிற்றோட்ட நோயால் தினமும் குழந்தைகள் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 14

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தைகளில் மற்றும் ஒரு குழந்தை நேற்று முன்தினம் மரணமானது.

இக் குழந்தையுடன் யாழ். ஆஸ்பத்திரி பதிவேட்டின்படி 13 குழந்தைகள் வயிற்றோட்டத்தினால் மரணமாகி உள்ளன.

நேற்று முன்தினமும் புதிதாக 6 குழந்தைகள் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டன. வார்ட்டில் 22 குழந்தைகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றன.

திருநெல்வேலி அம்மன் வீதியைச் சேர்ந்த புஸ்பராசா டினேஷ் என்ற மூன்று மாத குழந்தையே நேற்று முன்தினம் மரணமான குழந்தை ஆகும். [இ-15]

45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் வ. சி. செல்லையா

(இறாப்பர், கொழும்பு மாநகர சபை)

தோற்றம்:	மறைவு:
1911 — 12 — 27	1992 — 09 — 30
பன்னாலை	ஆஸ்திரேலியா

தென்னிலங்கை பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் கொழும்பு மாநகர சபைச் சிறாப்பரும், கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் தலைவருமான திரு. வ. சி. செல்லையா அவர்கள் ஆஸ்திரேலியாவில் 30 — 09 — 1992 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அமரர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரஞ்சன், மோகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், சங்கரப்பிள்ளை (கொழும்பு கொம்மேஷல் கொம்பனி, முன்னாள் அதிகாரி), சின்னத்தம்பி (கொல்லங்கட்டி), சுப்பிரமணியம் (வவுனியா மத்திய மகாவித்தியாலய முன்னாள் ஆசிரியர்), திருமதி செல்வநாயகி (கணக்காய்வாளர், ச. வ. இரத்தினத்தின் மனைவி, லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரருமானார்.

அன்னாரின் நற்கதியடைய எமது குலதெய்வமாகிய வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
சி. சிவராசா (பெறாமகன்.)
"அனந்த இல்லம்",
பன்னாலை. [23262]

முதலாவது பிறந்ததின வாழ்த்து



★ செல்வி ஆன்மேரி (பிரியா) ★

சிலுவைதாஸ் சுசீலா தம்பதிகளின் அருந்தவப் புதல்வி பிரியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார்

இவரை பிராண்ஸிலுள்ள அன்ரி வவா, சித்தப்பா எமிலியான், அக்கா இனின்ரா, மாமா ராசா யாழ்ப்பாணத்திலுள்ள அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியம்மா, மாலதி அக்கா, அத்தைமார் மாமாமார், சித்தியார், சித்தப்பாமார், மச்சாள்மார் சகல சகாய அன்னையின் அருள் பெற்று, சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

677/21, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். [23230]

அழைப்பு

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

நினைவுச் சொற்பொழிவுத் தொடரில்

அமரர் V.M. ஆசைப்பிள்ளை

(அதிபர், யாழ். இ. க. 1952 — 1961)

அவர்களின்

நினைவுப் பேருரை

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 16 — 11 — 1992 (திங்கள்)
நேரம்: மாலை 3-00 மணி
பொருள்: "இனத்துவமும் தேசிய வாதமும்" - அரசியல் பரிமாணங்கள் -
பேருரை: பேராசிரியர் N. பாலகிருஷ்ணன், தலைவர், வரலாற்று முதுமானித்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன், (செயலாளர்)

யாழ். இ. க.
பழை மா. ச.

இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய மின்னொளி உதைபந்தாட்டக் கழகம் நடத்தும் திபாகி திலீபன் ஞாபக தங்க இரண்டாவது ஆண்டு விழா மின்னொளி உதைபந்தாட்டப் போட்டியும், பரிசளிப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெறும். (த)

நெல் வயல்களில் புழுக்கள்

வட்டுக்கோட்டை, நவ 14

வட்டுக்கோட்டை நெல் வயல்களில் கறுப்பு, பச்சை நிறப் புழுக்கள் ஏராளமாகக் காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. சேர வகைகளின் இலைகளைத் தின்று அழித்து விடும் இப்புழுக்களினால் நெற்பயிர்களுக்கும் தென்னை மரங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-பி)

முஸ்லிம்களுக்கு தனிப்படை செய்திக்கு மறுப்பு

கொழும்பு, நவ. 14

முஸ்லிம்களுக்கு என தனியான ஒரு படை திரட்டப் படவில்லை.

கட்டுப்பாடுகள் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க செய்தியாளர்களிடம் முன்கூட்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தில் சேர்க்கப்படும் முஸ்லிம்கள், ஏனைய இனத்தவருடன் சேர்ந்தே பணிபுரிய வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

வெளிவந்துவிட்டது

ஆதிம ஜோதி நா. முத்தையா அவர்களின் மீள்பார்வையுடன் கூடிய சைவநெறி, தமிழ் மீம்டலுக்கான கிளைவிடை ஆண்டு 11. ஆசிரியர்: க. சத்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்; எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

(சி-3668)

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம

மீனாட்சி கல்யாணம், ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரார்த்தனை, நவராத்திரி, அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர், சான்றோர் யார்? ஆகிய இன்னும் பல போதனைக் ரிய அம்சங்களை உள்ளடக்கிய "ஸ்ரீராமகிருஷ்ணர் விஜயம்" இப்பொழுது கிடைக்கின்றது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(சி-3778)

ஆண்டு - 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இவை மாதத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna (சி-3755)

நல்லினத் தோடை

வினாதியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன்தரும் நிட சாத்திரமான நெந்த இனத் தோடங் கன்றுகள் மற்றும் பதியைத்த பாற்கொய்யா நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. இடம்: தனராஜா, நிலாவரையடி நவக்கிரி, புத்தூர். (5420)

மணமக்கள் தேவையா?

உங்கள் மணப்பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம் சந்திப்பு: சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (23158)

நீம் சுகாதார தூபம்

நீம் சுகாதார தூபம் ஓர் இயற்கை நுளம்பு விரட்டி. நுளம்பு பெருகிட நேயும் பரவிடும்; பாதுகாப்புப் பெற உள்ளூர் உற்பத்தியான நீம் சுகாதார தூபம் பாவியுங்கள். அக்னா கோப்பி கடைகளிலும் விற்பனைய கின்றது. மிக்கவை. (சி-3698)

மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான முறையில் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (23194)

அன்பான திருமண சேவை

B.Sc மணமகனுக்கும் (சைவம்), Bank Staffக்கும் மணப்பெண்கள் தேவை. ஞாயிறில் தொடர்புகொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். (23257)

பரிசளிப்பு விழா

நல்லூர் கந்தசுவாமி கோவில் கருடாரூத உற்சவ காலத்தின் போது நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிறு காலை 9-00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதின மண்டபத்தில் நடைபெறும். (ந)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் க. சச்சிதானந்தம் B.Sc.

தோற்றம்: 15—04—1943 மறைவு: 14—11—1987

தங்களால் உருவான தாவரவியற் பூங்காவின் பசுமை போலவே தங்கள் நினைவு எங்கள் மனதில் என்றும் நிலைக்கும்; தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
விஞ்ஞான மன்றம், பா. ஆ. ச., ப. மா. ச.,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

நினைவு நாளும், விஞ்ஞான தினமும் 16-11-1992 திங்கள் காலை 8-00 மணிக்கு நடைபெறும்.

(23260)

45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 11 - 11 - 1976

மண்ணிற்காக: 01 - 10 - 1992

தாமரைக்கண்ணன்

(கனீஷியஸ் சதீஸ்குமார்)

இளைத்தம்பி மகேஸ்வரன் பிறட்சிட் அம்மாள்
தம் குமரன் கனீஷியஸ் சதீஸ்குமாரின்
ஆண்டு தொண்ணூற்றிரண்டு ஐப்பசியின்
ஓரைம் நாளே மண்ணுக்காய் உயிர்கொடுத்து
தன் வழியில் மறவர் தாளை சேரப் போனீனிலே
தமிழீழத் பிறக்கப் பணி கிறக்க வான்
கூண்டேகி நாற்பத்தைந்தாம் நாளின்றதனில்
கூடுவீர் இறை வேண்டிக் கழல் பணிவீர்!

அப்பா, அம்மா,
சகோதரர்களுடன், பேரன், பேர்த்தி,
221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (23242)

ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 28 — 12 — 1955

விண்ணில்: 27 — 10 — 1991

அமரர் வேலன் கணேசு

(முன்னாள் கிளை முகாமையாளர்,
தெ. ப. கி. கூ. கட்டுறவு சமாசம், மானிப்பாய்)

திதி: 14 — 11 — 1992

மார்புழைப் பண்புடனே
வாடுபெட்டுக் காப்பாற்றி
மார்தட்டி வாழ்ந்தவனே
மறைத்திரோ மாயமதாய்
யார் தருவார் ஆறுதலை
அநாதரவாய் ஆகிவிட்டோம்
நீர் ஒருகால் வந்தெமக்கு
காட்சி தர மாட்டீரோ.

மனைவி, மகன்,
கந்தசாமி, இராசதுரை குடும்பம்,
நண்பர்கள்,
மானிப்பாய். (23261)

தட்டெழுத்தாளர் தேவை

யாழ். நகரில் ஒரு விளம்பரதாரருக்கு தமிழ்/ ஆங்கில தட்டச்சாளர்கள் தேவைப்படுவதால் உடனடியாக மனுச் செய்யவும்.

மே/பா 867, உதயன்.

(5562)

பற் சிகிச்சை நிலையம்

(எஸ். பி. சாமி அன் கோ கட்டடம்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பார்வையிடும் நேரம்:-
தினசரி ந. மு 12-00 — பி. ப. 2-00 மணி வரை

(5519)

நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18 — 05 — 1921

மறைவு: 14 — 11 — 1991

அமரர்

இளையதம்பி ஐயம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

எங்கள் நெஞ்சம் நிறைந்தவரே!
அன்புத் தெய்வமே!
பாசம் உள்ள எம் இனிய அப்பாவே!
அன்பான மாமாவே!
பிரியமுள்ள அப்பப்பாவே, தாத்தாவே!

நீங்கள் பிரிந்து ஆண்டொன்று ஆனாலும் ஆறாத எம் நெஞ்சை விட்டு உங்கள் நினைவுகள்;

உங்கள் பிரிவால் தவருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
மைத்துனர்மார் மற்றும் உற்றார், உறவினர்,

அரசடி,
சங்கத்தானை. (23254)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 — 08 — 1941

மறைவு: 27 — 11 — 1991

திருமதி ரோகினி தியாகராசா

திதி: 15 — 11 — 1992

அன்பின் திருவுருவே!
பாசத்தின் உறைவிடமே!
பாசமழையே நீ! பாதியில் ஒய்ந்ததேனோ? - எனினும்
உங்கள் நினைவுகளை நெஞ்சில் நிறுத்தி,
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்;

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்,
அன்பு அக்கா, மச்சான், உறவினர்.

எஸ். தியாகராசா (காந்தி),
சுக்கலேவி வடக்கு. (23255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

காதில் போடுவாரா?

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களைப் பாதிக்கக் கூடியதான இராணுவ நடவடிக்கை எதற்கும் அரசியல் தலைமைத்துவம் உத்தரவிடும் வாய்ப்பு எதுவும் இல்லை.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெல்ல இயலும் என்ற நம்பிக்கையை முற்றாக இழந்துவிடும் நிலையில் அரசாங்கம் உள்ளது.

கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாத கஷ்ட நிலை அரசுப் படைகளுக்கு உண்டு. கிழக்கில் அரசாங்கத்துக்கு இருப்பதாகக் கூறப்படும் மேலாண்மைக்குச் சவாலாக விடுதலைப் புலிகள் விளங்குகின்றனர்.

கொழும்பில் உள்ள அரசியல் இராணுவ விமர்சகர்கள் கூறியிருப்பவற்றையே மேலே இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம். போரின் தன நிலைமைகளும் அவற்றின் விளைவுகளும் இக்கைய புதிய வடிவத்தைக் கோற்றுவித்திருப்பது உண்மையே எனினும் அரசாங்கத்தின் - ஜனாதிபதி பிரேமதாசாவின். உள் நோக்கம் - இலக்கு—எது என்பதனை எவராலும் சரியாகக் கண்டு கொள்வது கடினம்

வடக்கு - கிழக்குப் போரில் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பது அரசாங்கத்துக்கும், பிரேமதாசாவுக்கும் யுத்தத்தைப் பிரகடனம் செய்வதற்கு முன்னரே தெரிந்திருக்க வேண்டும். வடக்கு-கிழக்கில் அங்குலத்துக்கு அங்குலம் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்தால் கோற்கடிக்க முடியாமற் போன விடுதலைப் புலிகளை வென்று விட இயலும் என்று நம்பியே அவர் கடந்த மூப்பது மாதங்களை வீணாக்கி இத்தனை அழிவுகள், நஷ்டங்களுக்கும் அடிகோலினார்.

ஆனால் இப்போது, போரில் அரசு வெல்ல முடியாது என்பதை அவர் அனுபவ ரீதியாக நிச்சயம் புரிந்திருப்பார். அதனால் தென்னிலங்கையின் அபிவிருத்தி, அப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலை ஆகியன எந்தளவுக்குப் பின்தள்ளப்பட்டிருக்கும் என்பதையும் புரிந்திருப்பார்.

ஆகவே தொடர்ந்தும் போரை நீடித்து நாட்டை சீரழிக்க முடியாது, சீரழிக்கக் கூடாது என்று பிரேமதாசா நினைக்கக் கூடும். எனினும் விடுதலைப் புலிகளுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவர் எந்தவித பயனையும் — விளைவையும்— தரச்சக்தியற்ற வேண்டாத முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் எட்ட முடியாது என்பது அவருக்குத் தெரியும். அரசாங்கத்தின் சொந்தத் தீர்வு என்று எதனையும் சமர்ப்பித்துச் சிங்கள மக்களின் அபிமானத்தையும், ஆசனவையும் இழக்க அவர் தயாரில்லை.

அதனால் தான் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய திட்டம் ஒன்றை ரெலோவின் ஊடாக முன்வைத்திருக்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம் கொழும்பில் உள்ள தமிழர் குழுக்களுக்கிடையே பிளவை உண்டாக்கி அவற்றைப் பலவீனமாக்க முயல்கிறார்! தமிழர் தாயகம் என்ற அவர்களின் நிலைப்பாட்டை முறியடித்து, தான் நினைத்த தீர்வு ஒன்றை அவர்கள்மீது திணிக்கும் உபாயத்தில் புதிதாகநாட்டம் கொண்டிருக்கிறார். அப்பேற்பட்டவர் கொழும்பு அரசியல், இராணுவ விமர்சகர்கள் கூறுவதை காதில்போட்டுக் கொள்வாரா?

தமிழக இளைஞர் 2,000 பேர் இங்கு புலிகளுடன் பயிற்சி!

நாட்டின் எல்லை எம்மை நோக்கி வருகிறது என்கிறார் ஆளும் கட்சி எம். பி. சிறில்

கொழும்பு, நவ: 14

அரசாங்கப் பாடசாலை ஒன்றின் மோதுகை அவுக்கு திரு. பிரபாகரனிடம் ஆட்கள் இல்லை; ஆனால் இப்போது தமிழ் நாட்டிலிருந்து இரண்டாயிரம் பேர் வரை வந்து எம்மைத் தாக்குவதற்குப் புலிகளுடன் பயிற்சி பெறுகின்றனர்;

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. டாக்டர் எம். பி.எம். சிறில் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்;

எமது நாட்டின் எல்லை எம்மை நோக்கி வரத் தொடங்கி இருக்கிறது—என்றும் அவர் கூறினார். (இ-எ)

மாதம் இரு தடவைகள் 40 லொறிகளில் உணவு

முல்லைத்தீவுக்கு அனுப்பப்படுமாம்

கொழும்பு, நவ. 14

இரு வாரங்களுக்கு ஒரு முறை 40 லொறிகளில் உணவுப் பொருள்களை முல்லைத்தீவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது;

கூட்டுப் படைகள் தலைமை அலுவலகத்தில் அனுமதி கிடைத்ததும் 40 லொறிகளும் உணவுப் பொருள்களுடன் மாதம் இரு தடவைகள் முல்லைத்தீவுக்குச் செல்லும் என்றும் —

இதற்கான நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு எடுத்து வருகின்றது என்றும் —

கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பயணிகளை ஏற்றிச் செல்ல திருமலையில இருந்து தீவகத்துக்கு கப்பற்சேவை

கொழும்பு, நவ 14

தீவுப்பகுதியில் இருந்து கொழும்புக்கு கப்பல் மார்க்க மாக பயணிகள் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவாம்.

கூட்டுப்படைகளின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது;

தீவகத்தில் இருந்து திருகோணமலைக்கு நாறு ரூபா மட்டுமே கப்பல் கட்டணமாகப் பெறப்படும். அடுத்த வாரத்தில் இருந்து இந்த போக்குவரத்து சேவை ஏற்படுத்தப்படும்.

நயினாதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, எழுவைதீவு மற்றும் காரைநகர் போன்ற பகுதிகளில் இருந்து கிளிலி பன்னை திருகோணமலைக் குச் செல்லக் கூடியதாக இருக்கும். நாகதேவன் என்ற கப்பலில் கிளிலியன்கள் பிரயாணம் செய்ய கடற்படையினர் தேவையான ஒழுங்குகளைச் செய்து வருகின்றனர்.

இப்படி அரசசெய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

அரசைக் கலைத்த பின்னர்தான் இனப்பிரச்சினைத் தீர்வு யோசனை

சு. க. முன்னணி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

அரசாங்கத்தைக் கலைத்த பின்னர் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆலோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைக்கும்;

இப்படி அக்கட்சியின் முன்னணி எம். பிக்களில் ஒருவரான திரு. மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்;

இது பற்றி மேலும் தெரிவித்த அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர், திரு. ராஜபக்ஷாவின் இந்த அறிவிப்பு குறித்து சுதந்திரக் கட்சியோடு சேர்ந்து இருக்கும் தமிழ் எம். பிக்கள் புரிந்து கொள்வார்கள் என்று தெரிவித்தார்;

ஜக்கிய தேசியக் கட்சியோ தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய கூற்ற நண்பன்; இதனை வடக்கு-கிழக்கு தமிழ் எம். பிக்களும் தமிழ் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்; (இ-எ)

யாழ். மாநகரசபையின் வீதி விளக்குத் திட்டம் 2 கிழமைகளில் அமுல்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாநகரசபைப் பகுதியில் இரவு நேரங்களில் மின் எண்ணெய் விளக்குகளை எரிய வைக்கும் திட்டத்தின் கீழ் மொத்தம் 250 விளக்குகளை எரிய வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய இடங்களில் விளக்குகளை எரிய விடுவது மூலம் இரவு நேரங்களில் விபத்துக்களைத் தடுக்கலாம் என்று கருதப்படுகிறது;

தற்போது பரீட்சார்த்த மாக யாழ். மாநகரசபைப் பகுதியில் 8 விளக்குகள் இரவு நேரங்களில் எரியவிடப்பட்டுள்ளன.

இத்திட்டம் வெற்றி அளித்தால் அடுத்த இரண்டு கிழமைகளில் 50 விளக்குகளாக எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் பின்னர் 250 விளக்குகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது; [இ-162]

தேசத்தின் தேவைக்கு இறுதியில் தேகங்களையே உரமாக்கியவர்கள்

தாம் வாழும் மண்ணின் விடுதலைக்காகவும், தமது சந்ததி எதிர்காலத்திலேனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவும், தம்மையே தியிட்டுக் கொண்டவர்கள்தாம் இந்த மாவீரர்கள்;

இவர்கள் ஆனியன் காலடி எம் மண்ணில் பதியக் கூடாது என்பதற்காக எல்லாளனின் வேலியாகி நின்றனர்கள். கண்ணை இமை காப்பது போல் கண் துயிலாது காவல் நின்றனர்கள். மலைபோல பகைவன் படை வந்தெதிர்த்த வேளைகளிலும் தோல்வியை ஏற்காது நின்றெதிர்த்தவர்கள்.

எதிரிகளை இம் மண்ணி லிருந்து அகற்றுவது மட்டு மல்ல இவர்களின் பணி எதிரியிடமிருந்து மீட்கப்பட்ட மண்ணானது சாதி - மத பேதங்களற்ற சமதர்ம பூமியாகத் திழ வேண்டும் என்பதும் இவர்கள் கண்ட கனவாகும்.

சொந்த பந்தங்களையும், சுகபல எண்ணங்களையும் அறுத்தெறிந்துவிட்டு தேச நலன் ஒன்றே இலக்கெனக் கொண்டு, ஆயுதங்களைத் தாங்கிய தோள்களுடன் தேசத்தின் விடுதலைக்காக மேடைகளில் முழங்கிக் கொண்டு, செயற்பட முடியாமல் முடங்கிக்கிடக்கும் வாய்ச்சொல் வீரர்களல்ல இந்த மாவீரர்கள். தேச விடியலுக்காக குருதி சிந்தி, அதனைச் செவ்வடிவாக்கிய தீரர்கள், தியாகிகள் இவர்கள்;

★

மாவீரர் நினைவுச் சித்திரம்

வீடமைப்பு மானியம்

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் — தெவீடமைப்பு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் — மாநகரசபையால் தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பேருக்கு முதற்கட்ட மாக தலா 3 ஆயிரம் ரூபா வீதம் புதனன்று யாழ். மாநகர சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் வீடற்ற மிக வறிய குடும்பத்தினருக்கு வழங்கப்படுகின்ற இம் மானியத்தின் மிகுதிப் பணமான 8 ஆயிரம் ரூபா இவர்களின் வீடமைப்பு வேலையை பொறுத்து வழங்கப் படும் என யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன; (இ-162)

பொருள்கள் வந்து சேராததால் செஞ்சிலுவை நிவாரண பணிகள் இடைநிறுத்தம்

கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வந்து சேராத தால் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தனது நிவாரணப் பணிகளை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது;

பாதிக்கப்பட்டவர்களுக்கு, காணாமற் போனவர்களுக்கு ஆகியோருக்கான நிவாரணம் உட்பட பல நிவாரணப்பணிகளை இக் கிளை மேற்கொண்டுவந்தது.

உலர் உணவு நிவாரணம் வழங்க பொருள்கள் வரவில்லை இல்லாதபடியால், நிவாரணம் வழங்க முடியாது என்று இக்கிளை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைத்தலைவர் திரு. ஆர். சிவராஜா தெரிவித்தார்;

இராணுவ நடவடிக்கைகள் போது இடம்பெயரும் மக்களுக்கான நிவாரணத்தை நிறுத்தியதாக அறிவித்திருந்தது;

இராணுவ நடவடிக்கைகளின்போது இடம்பெயரும் மக்களுக்கான நிவாரணம் தவிர்த்த ஏனைய நிவாரணங்கள் பாதியும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இணைத்தலைவர் அறிவித்துள்ளது.

காணாமற்போனவர்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கான பொருள்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும்—

ஏனைய நிவாரணங்களுக்கான பொருள்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகமும் வழங்கி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

மன்னாருக்கு பயிற்சி பெற்ற கன்னியாஸ்திரிகள்

யோசப் ஆண்டகை நடவடிக்கை

கொழும்பு, நவ. 14

இராணுவக் கெடுபிடிப்பாட்டில் உள்ள மன்னார் பகுதிகளில் வாழும் மக்களின் வைத்திய சேவைகளுக்காக பயிற்சி பெற்ற கன்னியாஸ்திரிகளை அனுப்ப மன்னார் மறைமாவட்ட ஆயர் ராயப்பு யோசப் ஆண்டகை நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

1,800 பேர் வீடிழப்பு

கொழும்பு, நவ. 14

கடும் காற்றினால் ஏற்பட்ட கடற் கொந்தளிப்புக் காரணமாக மட்டக்களப்புக் கரையோரத்தில் சுமார் 451 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 800 பேர் வீடிழந்தனர்.

நாவலடி, முகத்துவாரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 200 பேர் கல்லடி இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

எஞ்சிய சுமார் 600 பேர் கல்லடிப் பேராலயத்தில் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

கலை விழா

பண்டத்தரிப்பு கலைக் கோட்டத்தினரின் நாளை ஞாயிறு பிற்பகல் 2-00மணிக்கு மருதனார்மடத்தில் இருக்கும் யூனியன் கல்லூரியில் கலைவிழா ஒன்று நடத்தப்படும்.

மகாஜனாக்கல்லூரி, யாழ்ப் பாணக்கல்லூரி, யூனியன்கல்லூரி, விசேரோறியாக்கல்லூரி, ஆட்டு. இந்துக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் ம. வி. ஆகியவை கலைநிகழ்ச்சிகளில் பங்கு பற்ற உள்ளன.

[இ-84-153]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் தொடர்ந்தும் புலிகளின் அச்சுறுத்தல்!

ஜெயலலிதா கூறுகிறார்

புதுடில்லி, நவ. 14
தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இன்னமும் இருப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் நடைபெறும் குற்றவியல் நீதி நிர்வாகம் பற்றிய மாநில முதலமைச்சர்களின் மாநாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உரையை அவரது சார்பில் தமிழக மாநில சட்ட, நீதித்துறை அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி வாசித்தார். அந்த உரையிலேயே செல்வி ஜெயலலிதா இத்தகவலை வெளியிட்டிருந்தார்.

பொலிஸ்துறையை நவீனமயப்படுத்துவதற்கு மத்திய அரசு கூடிய நிதி ஒதுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கடுமையான குற்றங்களைப் புரிபவர்களை பிணையில் விடுவிப்பதைத் தவிர்க்குமுகமாக குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யவேண்டும் என்றும் அவர் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்

இம்மாநாட்டை நேற்று பிரதமர் நரசிம்மராவ் தொடக்கி வைத்தார்.
(உ-எ)

திடீர் தேர்தல் நடத்த ஜெயலலிதா திட்டம்?

சென்னை, நவ 14
தமிழகத்தில் திடீர்த் தேர்தல் நடத்தப்பட்டால் அ. தி. மு. கவின் நிலை எப்படி இருக்கும் என்பதை முதலமைச்சர் ஜெயலலிதா அ. தி. மு. கவின் மாவட்டச் செயலாளர்களை நேரில் அழைத்து விசாரித்து அறிந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

எம். ஜி. ஆர். அண்ணா தி. மு. க. தலைவரும் முன்னாள் அமைச்சருமான எஸ். திருநாவுக்கரசு இத்தகவலை வெளியிட்டார்.

இச் சந்திப்பு பற்றிய தகவல் தமக்குக் கிடைத்துள்ளதாகக் கூறிய திரு. திருநாவுக்கரசு, சட்டத்துக்கு முரணாக நடந்து கொண்ட ஜெயலலிதா முதலமைச்சர் பதவியில் இருந்து விலகுவது உறுதி என்றும் கூறினார்.
(உ-எ)

அவதூறு வழக்குத் தாக்கல்: தமிழக அரசு சாதனை!

அவதூறு வழக்குகளை தாக்கல் செய்வதில் தமிழக அரசு சாதனை புரிந்திருப்பதாக பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் கடந்த பதினைந்து மாதங்களில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அவதூறு வழக்குகளின் எண்ணிக்கை 32 என்றும்—

இவற்றில் ஜெயலலிதா மட்டும் 27 வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலான வழக்குகள் மு. கருணாநிதி, நாஞ்சில் மனோகரன் மற்றும் ஆலடி அருணா ஆகியோர் மீது தொடரப்பட்டுள்ளன.

முதலமைச்சர் ஜெயலலிதா ஆங்கில சஞ்சிகைகளான கரன்ட், பிஸினஸ் ஸ்ராண்டர்ட், ஒப்சேர்வர் ஆகியவற்றின் மீதும், நக்கீரன், ராஜரிஷி ஆகிய தமிழ் ஏடுகள் மீதும் அவதூறு வழக்குகளைத் தொடர்ந்துள்ளார்.
(உ-எ)

கருணாநிதி ஆஜரானர்

சென்னை, வேப்பேரியில் நடந்த தி. மு. க. கூட்டம் ஒன்றில் முதலமைச்சர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியதாக மு. கருணாநிதி மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரியான திரு கருணாநிதி நீதிமன்றத்தில் ஆஜரானார் என்று பத்திரிகைகளில் தெரிவிக்கப்படுகிறது.
(உ-எ)

இந்தியாவுக்கு மேஜர் விஜயம்

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் குடியரசு தின விழாவில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இன்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் பெய்யும்.

அடுத்த 36 மணி நேரத்துக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது. —இவ்வாறு இலங்கை வானொலி மேலும் அறிவித்தது.
(உ 5)

குடாநாடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிந்து நாசமாகின

யாழ். மாநகரசபைப் பகுதியில் வெள்ளம் காரணமாக பொம்மைவெளியில் குடியிருந்த பலர் வெளியேறிவிட்டனர். நல்லூர்ப் பகுதியில் செட்டியார் தோட்டம், மூக்கவிதானயர் வீதியில் பல வீடுகளுக்குள் நீர் புகுந்தது. கொக்குவில் தலையாழிப் பகுதி, கள்ளப்புறாய் பகுதியிலும் வெள்ளத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.
(அ 15-17-28-143-117)

வயிற்றோட்டம்: 14 குழந்தைகள் 13 நாட்களில் பலி

யாழ்ப்பாணம், நவ 14
வயிற்றோட்ட நோயினால் யாழ் ஆஸ்பத்திரியில் மட்டும் இம்மாதத்தில் — கடந்த 13 நாட்களில் 14 குழந்தைகள் மரணமாகின.

நேற்றும் பல குழந்தைகள் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டன.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)
(உ-15)

சேவைக்கால பயிற்சி

உடுவில், நவ. 14
மருதனார்மடம் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 9, 10, 11இல் வர்த்தகமும் கணக்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரு நாள் சேவைக்கால பயிற்சி வகுப்புகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்றும் நாளையும் முழு நேரமும் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு ஆசிரிய ஆலோசகர் திரு. எஸ். கணேஷ் அறிவித்துள்ளார்.
(ஓ-152)

வேலை வாய்ப்பு

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் (2ஆம் வகுப்பு, 2 ஆம் தரத்துக்கு) ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி இம்மாதம் 20 ஆம் திகதியாகும்.

யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சமூக விஞ்ஞான மன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதகல், சில்லாலைப் பகுதியிலிருந்தும் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

இரவு 8 மணிக்கு மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் குருநகர் கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.
(உ-15 28)

கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் காரைதீவு, கல்முனை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் சுமார் 2,500 வீடுகள் சேதமடைந்தன.

அம்பாறையில் 2,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன; 67 கட்டடங்களின் கூரைகள் சேதமடைந்தன. அங்கு சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின. 236 தொழிற்சாலைகள் சேதமடைந்தன

அம்பாறைப் பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மூன்று வள்ளங்களின் நிலை தெரிய வரவில்லை என்றும் —

திருமலையில் இருந்து புறப்பட்டுச் சென்ற வேறு ஐந்து இழுவைப் படகுகள் இன்னமும் கரை திரும்பி வரவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது

மட்டக்களப்பில்

மட்டக்களப்பின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாக 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 800 பேர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

நாவலடி, முகத்துவாரம், பொது முகத்துவாரம் ஆகிய கரையோரங்களில் வாழும் ஆயிரத்து 200 பேர் வீடுகளில் இருந்து வெளியேறி கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மகளிர் வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

இதனிடையில்—

கடும் மழை காரணமாக இரத்தினபுரியிலும் சுற்றுப்புறப்பகுதியிலும் பெரு வெள்ளமும் மண்சரிவும் ஏற்பட்டது.

நாட்டின் பல பகுதிகளிலும் ரயில் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன
(உ-எ-5)

பிரபாகரன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தீவிரவாதத்தை உடன் ஒழித்துவிடலாம் என்று நம்பவில்லை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார். ஆனால் திரு பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை அவர் நிபந்தனைகளை விதிக்கிறார். அரசு அந்த நிபந்தனைகளை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது.

மறுபுறத்தில்—

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் கொண்ட குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் தீர்வுகாணும் முயற்சியை நோக்கி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளது. அதற்கான பேச்சுக்கள் நடக்கின்றன. இம்முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால் திரு பிரபாகரன் ஒரு கட்சியாக இல்லாத நிலையில் காணப்படும் எந்தத் தீர்வும் பயன்தரப்போவதில்லை. என்றும் [illegible] தார்.
(உ)

குடாநாட்டில் 10 மாதங்களில்

7 ஆயிரத்து 754 பேருக்கு மலேரியா நோய் பீடித்தது

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 7 ஆயிரத்து 754 பேர் மலேரியா நோயினாலும், 837 பேர் மூளைக்காய்ச்சல் நோயினாலும் பீடிக்கப்பட்டனர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் மலேரியா தடுப்பு இயக்கத்தினர் நடத்திய கணிப்பீடுகளில் இருந்து இத்தகவல்கள் தெரிய வந்திருக்கின்றன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மட்டும் 2 ஆயிரத்து 800 பேர் மலேரியா நோயினாலும் 387 பேர் மூளைக்காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டனர்.
(உ-162)

தமிழகத்திலும் கடும் மழை

சென்னை, நவ 14
தமிழகத்தின் தென்பகுதியிலும் நேற்று கடும் மழை பெய்தது தமிழகத்தின் தென்மேற்கு கடலில் மையம் கொண்டிருந்த சூறாவளி காரணமாக கடுங்காற்றுடன் மழை பொழிந்தது. இதனால் தஞ்சை மற்றும் நாகை மாவட்டங்களில் 2 லட்சம் ஹெக்டர் நெற்பயிர் வெள்ளத்தில் மூழ்கியது.

3 முதல் 5 அடி வரை எழும்பிய கடல் அலைகள் வேதாரண்யம், அதிராம்பட்டினம் மற்றும் முத்துப்பேட்டை ஆகிய கரையோரப் பகுதிகளைத் தாக்கிச் சேதம் விளைவித்தன.

மீன் பிடிக்கச் சென்ற சில மீனவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.
(உ-எ)

கப்பல் விபத்து

சென்னை, நவ. 14
இந்தியாவில் இருந்து கொழும்பு சென்ற சிறிய கப்பல் ஒன்று அங்கிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது பாறையில் மோதிச் சேதம் அடைந்தது என்றும்—

கப்பலில் இருந்த பதினைந்து பேரும் பொலிஸாரினால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என்றும் இந்திய வானொலி நேற்று மாலை அறிவித்தது.
(உ-எ)

விதைகள் விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, நவ. 14
இறக்குமதி செய்யப்பட்ட கரட், பீற்றூட், கோவா, டுபாய் பூசணி, கறி மிளகாய், தக்காளி விதை வகைகள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டு தற்போது யாழ். மாவட்ட சமநல சேவை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுகின்றன.

இவற்றைவிட பி ஜி 350, பி. டபிள்யூ 351 இன விதை நெல்களும் விற்பனைக்காக தற்போது சமநல சேவை நிலையங்களில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

நெல் விதைப்பதற்கான இறுதித் திகதியை நாளை 15 ஆம் திகதிவரை அரச அதிபர் நீடித்திருப்பதாகவும் —

இத்திகதிக்கு முன்னர் பயிர்களுக்கு காப்புறுதி செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(உ-162)

மரண அறிவித்தல்கள்

திரு. வைத்திலிங்கம் சந்திரம்பிள்ளை

சுதுமலை மத்தியைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் சந்திரம்பிள்ளை அவர்கள் 10-11-92 அன்று 5/1, லேனா றோட், மவுண்ட்லேவினியாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரமூர்த்தி (கிராம சேவையாளர், மாதகல் மேற்கு, இளவாலை), சத்தியமூர்த்தி (படவரைஞர், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நற்குணவதி சுந்தரமூர்த்தி, திருமதி பராசக்தி சத்தியமூர்த்தி (தாதி, பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), திரு. ஞா. தங்கராஜா (ஓய்வுபெற்ற விதானர்) ஆகியோரின் மாமனாரும், சுகந்தினி, சுதர்சன், சுதர்சினி, சத்தியபரன், சதீஸ்பரன், சத்தியபிரியா, பிரபாகர், பிரதீஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

சுந்தரமூர்த்தி
மானிப்பாய் றோட்,
சுதுமலை.

சத்தியமூர்த்தி
94, பருத்தித்துறை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர்.

(23265)

பொன்னையா சபாரத்தினம்

(முகாமையாளர், ராணி சினிமா, யாழ்ப்பாணம்.)

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா சபாரத்தினம் 12-11-92 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகமுத்து பொன்னையாபிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன், இந்திரகுமார், ராஜ்குமார், ரவிக்குமார், ரவிசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, Dr. தர்மராஜசிங்கம் (அளவெட்டி) யோகரட்ணம், மனோரஞ்சிததேவி, ராஜரட்ணம், தளையசிங்கம், சிவராஜரட்ணம், பராசக்தி, ஈஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சிவகுரு, திருமதி சிவகுரு ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் நேற்று (13-11-92) தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. தர்மராஜசிங்கம்,
பொ. ராஜரத்தினம்
(சகோதரர்கள்)

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(5430)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org